தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 21, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 மே 4, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

தெய்வத்துக்கென எத்தனையோ அருங்குணங்கள் கூறப்படுகின்றன. உலகில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானில் வாழ்வதாகச் சொல்லப்படும் தெய்வத்துக்கு இணையாக வைத்து மதிக்கப்படுவான்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

211—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***14258—திரு. எஸ். தங்கப்பாண்டியன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதியில் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராஜபாளையம் தொகுதி அமைந்துள்ள விருதுநகர் மாவட்டத்தில், தற்பொழுது நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், எட்டு அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 17 சுயநிதிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. மேலும், விருதுநகர் மாவட்டம், திருச்சுழி பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி, அது இந்தாண்டு துவங்க இருக்கிறது. ஆகவே, தற்போது அரசு கலைக் கல்லூரி துவக்கும் எண்ணம் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29-4-2022 அன்று நடைபெற்ற மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மானியக் கோரிக்கையில் ராஜபாளையம் அரசு மருத்துவமனை மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு இணையாகத் தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இதைப் பரிந்துரை செய்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதியில் அரசுப் பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி மற்றும் Matriculation School என மூன்று வகையான மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து வருடத்திற்கு 5,535 மாணவ, மாணவிகள் படிப்பை முடித்துவிட்டு, மேல் படிப்பிற்காக வெகு தூரத்தில் உள்ள அரசுக் கல்லூரிக்குப் படிக்கச் செல்கின்றனர். ஆனால், மாணவிகள் காலையில்

2022 மே 4]

கல்லூரி சென்று மாலையில் வீடு திரும்புவதைத்தான் பெற்றோர் விரும்புகின்றனர். எனவே, பெற்றோர் விருப்பத்தினை நிறைவேற்றும் பொருட்டு, ராஜபாளையம் தொகுதியில் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் கல்விக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் அனைத்தையும் இந்த மன்றம் மட்டுமல்ல, தமிழக மக்கள் அனைவரும் நன்கு உணர்வார்கள். குறிப்பாக, அரசுப் பள்ளிகளில் படித்த மாணவிகள் உயர் கல்வி பயில்கிறபொழுது, அவர்களுக்கு மாதம் ரூ.1,000/– வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது, தமிழகத்தில் அரசுப் பள்ளிகளின் இருக்கை எண்ணிக்கையை உயர்த்துவது மட்டுமல்லாமல், மாணவிகள் அரசுக் கல்லூரிகளில் படிப்பதற்கான ஓர் உற்சாகத்தையும் உருவாக்கியிருக்கிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பெண்களுக்கென்று தனியாகக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதையும், நாங்கள் ஆலோசித்து, கலைஞர் அவர்கள் காலத்தில் கொண்டுவரப்பட்ட* Shift system *முறையில் அவர்களுக்கு எந்த அடிப்படையில் உதவி செய்ய முடியும் என்பதையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, எந்தெந்தத் தொகுதிகளில் அரசுக் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் இல்லையோ, அவற்றிற்கெல்லாம் முன்னுரிமை அளிக்கப்பட்டு அங்கெல்லாம், அக்கல்லூரிகளைத் துவக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலிலேயே சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் சென்ற ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 31 கல்லூரிகளை வழங்கியிருக்கிறார். அவற்றில் இந்தாண்டு துவங்கப்படயிருக்கிற கல்லூரிகளில் அவர் சார்ந்திருக்கிற விருதுநகர் மாவட்டம், திருச்சுழியில் ஓர் அரசு கலைக் கல்லூரி துவங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த*

ஆண்டு முதல் அது தனியார் கட்டடத்தில் தற்காலிகமாகச் செயல்படுத்தப்படவுள்ளது. இக்கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, நிரந்தரக் கட்டடம் கட்ட மேலேந்தல் கிராமத்தில் திரு. டி.ஆர்.எஸ். கார்த்திகேயன் என்பவரால் தானமாக வழங்கப்பட்ட நிலமும் தேர்வு செய்தாகிவிட்டது. அதற்கு மாண்புமிகு அமைச்சர்கள் திரு. K.K.S.S.R. மற்றும் திரு. தங்கம் தென்னரசு ஆகியோர் பெரும்பாலும் உதவி செய்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் தானமாக வழங்கப்பட்ட நிலத்தில் இந்த ஆண்டே கட்டடம் கட்டுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, கட்டடம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எங்கும் இல்லாத வகையில் ஒரே ஆண்டில் 31 கல்லூரிகள் தொடங்கப்படும் என அறிவித்த ஒரே முதலமைச்சர் நம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 234 தொகுதிகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான தொகுதி ராஜபாளையம் தொகுதியாகும். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் உயர்ந்த உள்ளத்தோடு மறுபரிசீலனை செய்து, ராஜபாளையம் தொகுதியில் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைக்க இந்த ஆண்டே நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு*

2022 மே 4]

ராஜபாளையம் தொகுதி மட்டும் கிடையாது; 234 தொகுதிகளும் தலைவர் அவர்களுடைய தொகுதிகள்தான். அவர்கள் சொல்லித்தான் நாங்களெல்லாம் ஜெயித்து வந்திருக்கிறோம். அவருக்காக அளிக்கப்பட்ட வாக்குகள்தான். ஆகவே, அனைத்துத் தொகுதிகளிலும் கேட்கப்படுவது என்பது நியாயமான கோரிக்கைத்தான்; அதில் தவறு கிடையாது. ஆனால், அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசுக் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகளில் மொத்தம் இருக்கின்ற இடங்கள் 1,588. அதில் இந்த ஆண்டு படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை 1,045. 543 இடங்கள் இப்போதே காலியாக இருக்கின்றன. அந்த மாவட்டத்திற்குக் கொடுக்கக் கூடாது என்பதல்ல. சென்ற வருடம் அதுவும் இல்லாத தொகுதியில்தான் கொடுத்திருக்கிறார்கள். இந்த வருடம் மாண்புமிகு அமைச்சர்கள் இரண்டு பேரும் மிகவும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, நேரம் வருகிறபோது, நிதி நிலைக்கேற்ப, வருங்காலங்களில் அது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின்பொழுதோ அல்லது பேசுகிறபொழுதோ அவைக்கு எப்பொழுதும் தவறான செய்திகளைச் சொல்லக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள் தலைவருக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பிடித்தது ராஜபாளையம்தான் என்ற ஒரு தவறான செய்தியை இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறார். ஆகையினால், அது அவைக் குறிப்பில் இருக்கலாமா என்பதைத் தாங்கள்தான் ஆலோசிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றாகத்தானே சொல்லியிருக்கிறார், அந்தத் தொகுதி மக்களுக்கு.

வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.